
ஞாலகுருவின் படைப்புக்கள்

# சுடலைப் பூசையும் கட்டாய விதிமுறைகளும்

பதினெண்சித்தர்கள்
வழங்கியுள்ள பூசைகளில்
மிகவும் எளிமையானதும்,
பேராற்றல் மிக்கதும்
இந்த சுடலைப் பூசைதான்.
இப் பூசையில்தான்
ஏராளமான மக்களுக்குத்
தாராளமாக அருள்
வழங்க முடியும்




நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 சித்திரை மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **“சுடலைப் பூசையும் கட்டாய விதிமுறைகளும்”** - பாளையங்கோட்டையைச் சேர்ந்த அடியான்களை முன்னிலைப்படுத்தி அனைவருக்கும் 1988இல் குருதேவர் வழங்கிய சுடலைப் பூசைக்கான விளக்கங்களும், சுடலைப் பூசையைச் செய்யும் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளும் அடங்கிய அஞ்சல் வடிவக் கட்டுரை இது.
2. **“செயல் விளக்கத் திருவோலை”** - மதுரையைச் சேர்ந்த சித்தரடியான் ஒருவருக்கு விளக்கங்கள் வழங்குவது போல் குருதேவர் தமது அருட்பட்டங்களைச் சாதிப்பதற்காகத் தாம் கடுமையான போராட்ட நிலைகளைச் சந்திக்க நேர்ந்த நிகழ்ச்சிகளில் ஒரு சிலவற்றை விளக்கி எழுதிய அஞ்சல்.
3. **“அருட்பயிர் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளரப் பாடுபட வேண்டும்”** - குருதேவர் தமது மதுரை அடியான் சமயக்குரவர் நால்வர் சன்னிதானத்திற்கு எழுதிய சுருக்க விளக்க அஞ்சல்.
4. **“இருக்கு வேதம் காண்டம் 1, மண்டலம் 2, நாள் உரைக்கோவை வாசகம் 1”** - குருதேவர் 1994இல் எழுதிய இருக்கு வேதத்தின் இந்தப் பகுதியில் இருந்த 48 வாசகங்களில் முதல் 8 வாசகங்கள்.

ஓம்

தலைமைப்பீடம்,
சென்னை-11,
17-11-88.

# சுடலைப் பூசையும் கட்டாய விதிமுறைகளும்

அருள்மிகு மூவர் குழு சித்தரடியான்கள் வைத்தியலிங்கம், பூவலிங்கம், பரமசிவம் அவர்கள் சமூகத்திற்கு,

1) சுடலைப் பூசையில் கட்டாயமாக குருதேவர் எங்கு இருந்தாலும் உருவ நிலை, அருவ நிலை, அருவுருவ நிலை, உருவருவ நிலை எனும் நான்கு நிலைகளில் ஏதேனும் ஒரு நிலையில் தோன்றத்தான் செய்வார். எனவே, பூசை ஆரம்பிக்கும் முன் சுடலைக்கு வந்திருக்கும் ஒவ்வொருவர் கையிலும் தேவைக்கேற்ப ஒரு கயிறுவது தர வேண்டும். அவர்கள் விரும்பினால் குடும்பத்தில் உள்ளவர்களுக்கோ, உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ சேர்த்து எத்தனை முடிகயிறு வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளலாம். சாதாரணமாக முடிகயிறு மூன்று ரூபாய்க்கு (ரூ.3/-) வழங்கப்பட்டாலும், சுடலையில் ரூ.1¼ என்று குறைந்த விலையில் வழங்கப்பட வேண்டும். இப்படி ஒவ்வொருவரும் ஒரு முடிகயிறையாவது கையில் வைத்துக் கொண்டுதான் சுடலைப் பூசையில் மந்திறங்களையும், பூசாமொழி வாசகங்களையும் ஓத வேண்டும். அங்கு பலி கொடுக்கும்போது கலந்து கொள்பவர் அனைவரின் நெற்றியிலும் குருதிப் பொட்டு வைக்க வேண்டும்.

2) பூசை முடிந்தபிறகு கையகல தாள்கள் அல்லது சிறிய கவர் கொண்டு வந்து அவரவர் கையால் சுடுகாட்டுச் சாம்பலையோ, மண்ணையோ எடுக்கச் சொல்லி அவர்களுக்கு மந்திரித்துத் தர வேண்டும். இப்படி 11 வாரம் வருபவர்களுக்கு எல்லாவிதமான பாதிப்புக்களும் அகன்று பாதுகாப்பு கிடைத்திடும்.

<u>குறிப்பு:-</u>

ஒவ்வொரு வாரமும் தரப்படுகின்ற <u>கருப்புக் கயிற்றை</u> மறுநாள் காலையிலோ, பகலிலோ எந்த நேரம் வேண்டுமானாலும் விளக்கேற்றி, ஊதுபத்தி கொளுத்தி, அவரவர்களுக்கு விருப்பமான தெய்வங்களையும், குலதெய்வங்களையும் வேண்டி கருப்புக் கயிற்றை வலது கையில் கட்டிக் கொள்ள வேண்டும்.

இப்படி ஒருமுறை வலது கையில் கட்டிய கயிற்றை மீண்டும் எப்பொழுது வசதி வாய்ப்பு இருக்கிறதோ, அப்பொழுது சுடுகாட்டுப் பூசைக்கு வந்து கயிற்றை அவிழ்த்துப் போட்டு விட்டு மீண்டும் புதுக் கயிறு பெற்றுக் கொள்ளலாம். அதாவது, கயிறு கட்டிக் கொண்டவர்கள் அடுத்தடுத்து சுடலைப் பூசைக்கு வர வேண்டும் என்பதில்லை. அவர்களுக்கு எப்பொழுது வசதி வாய்ப்பு இருக்கிறதோ அப்பொழுது வந்தால் போதும். ஆனால் 11 வாரம் வர வேண்டும். மேலும் கயிற்றைக் கட்டிக் கொண்டவர்களே சுடலைக்கு வர வேண்டும் என்ற அவசியம் இல்லை. கயிறை 1 வாரம் முடிந்தவுடனே அவிழ்த்து மஞ்சள் தண்ணீரில் நனைத்த சிறிய வெள்ளைத் துணியில் கட்டி யார் மூலமாவது சுடலைக்குக் கொடுத்தனுப்பலாம். ஆனால், கொடுத்தனுப்புபவர் பெயரையும், காணிக்கை ரூ.1¼ஐயும் (கயிறுக்கு காணிக்கை) சுடலை சாம்பல் எடுத்து வர சிறிய பேப்பரையும் கொடுத்து அனுப்பி விட வேண்டும். 11 வாரம் முடிந்தவர்களின் பட்டியலை குறைந்தது 1 வார காலத்திற்கு முன் தெரிவித்தால் தலைமைப்பீடத்திலிருந்து அவர்களுக்காகப் பூசை செய்து பூசனைப்

பொருட்களும், தேவையானால் தாயத்தும் அனுப்பி வைக்கப்படும். தாயத்து பொருளாதாரச் செலவை முன்னிட்டு ரூபாய் மூன்றிலிருந்து ஐந்திற்குள் இருக்கும். பூசனைப் பொருள் இனமாக அனுப்பப்படும்.

3) வாராவாரம் சுடலைக்கு வருபவர்களிடம் சுடலையில் ஒரு பெரிய பேரேடு நோட்டுக் வாங்கி அதில் தேதிப்படி கையெழுத்து வாங்கி அவரவர்கள் முகவரியைக் குறிப்பிட வேண்டும். கையெழுத்துப் போடத் தெரியாதவர்களிடம் கைரேகை வாங்கிக் கொள்ள வேண்டும். அப்படிச் சுடலையில் பூசையில் கலந்து கொண்டவர்களின் பெயரை வாங்கி வாராவாரம் தலைமைப்பீடம் அனுப்பினால்தான் அவர்களுக்குரிய பாதுகாப்புக்கள் குருதேவரால் வழங்கப்படும். ஏனென்றால் **பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள பூசைகளில் மிகவும் எளிமையானதும், பேராற்றல் மிக்கதும் இந்த சுடலைப் பூசைதான். இப் பூசையில்தான் ஏராளமான மக்களுக்குத் தாராளமாக அருள் வழங்க முடியும்**.

அதாவது அண்டபேரண்டங்களில் இருந்து இம்மண்ணுலகிற்கு வந்த பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் இந்துமதத்தை இம்மண்ணுலகிற்கு வழங்கியபோதே; கால வேகத்தாலும், கருத்து மாற்றங்களாலும், மனிதர்களின் மறதியாலும், அலட்சியப் போக்காலும், தவறான அருளாளர்களாலும், தீய மந்திறவாதிகளாலும் இந்துமதத்திற்கு ஏற்படக் கூடிய எல்லாவகையான தேக்கங்களையும், தேய்வுகளையும், பாதிப்புக்களையும் அகற்றி இந்துமதம் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் இம்மண்ணுலகின் இறுதிக் காலம் வரை நிகழ்த்தப்பட்டிடல் வேண்டும் என்பதற்காகவே, நான்கு யுகங்களிலும் தேவைக்கேற்ப பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி அருளாட்சி நாயகமாக, தத்துவ நாயகமாக, குருபீடமாக, குருதேவராக, அனைத்து வகையான ஆச்சாறியாராகச் செயல்படும் திட்டத்தை வகுத்திட்டார்கள்.

மேலும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டுமே தங்கள் தங்களின் காலங்களில், தேவைக்கேற்ப கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் அமைத்து உரிய பயிற்சிகள் நல்கி சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், ... என்போர்களை யெல்லாம் உருவாக்கி எல்லா வகையான வழிபாட்டு நிலையங்களையும், சுடலைகளையும் புத்துயிர்ப்புச் செய்யும் பணியையும்; தேவைக்கேற்ப புதிய புதிய அருட்கோட்டங்கள் ஆங்காங்கே அமைத்து மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கும் பணியையும் காலங்கள் தோறும் நிகழ்த்திட ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

இப்பொழுது அருளாட்சி நாயகம், தத்துவ நாயகம், இந்துமதத் தந்தை, குருதேவர், குருபீடம், ஞானாச்சாரியார், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் இந்து மறுமலர்ச்சிக்காகவும் (உலக மத மறுமலர்ச்சிக்காக => இந்து = மதம்); இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்காகவும், அருளுலகப் பொருளுலக இருள்களையும் இன்னல்களையும் அகற்றுவதற்காகவும், அருளாட்சி அமைப்புப் பணிக்காகவும், உலக இன மத மொழி விடுதலைக்காகவும், மானுட நல உரிமைகளைப் பேணி வளர்ப்பதற்காகவும், ... முழுக்க முழுக்க அனைத்து வகையான பதினெண்சித்தர் பீடப் பொறுப்புக்களை ஏற்றுள்ளார். அதற்கேற்ப அல்லும்பகலும் அயராது நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து ஆறு வகைப்பட்ட ஆணைகளையும் வழங்கித் 'தனிமனித வழிபாடு', 'குடும்ப வழிபாடு', 'உறவினர் வழிபாடு', 'ஒருமுறை தாயத்தார் வழிபாடு', 'குறிப்பிட்ட வட்டாரத்தார் வழிபாடு', 'ஊர்ப்பொது வழிபாடு', ... முதலிய பல வழிபாடுகளுக்கும் தேவையான தத்துவ விளக்கங்களும், சித்தாந்த விளக்கங்களும், செயல்முறை விளக்கங்களும், பூசாவிதிகளும், பூசாமொழிகளும், ... வழங்கி வருகிறார்.

இவற்றின் மூலமாவது மிகமிகத் தெளிவாகவும், நளின மெலினமாகவும், முறையாகவும், நிறையாகவும், பிறர் மனம் நோகா வண்ணம், உலகம் தழுவிய அளவில் எண்ணப் புரட்சி (Revolution in Idea), சிந்தனைப் புரட்சி (Revolution in Thinking), கருத்துப் புரட்சி (Ideological Revolution), கொள்கைப் புரட்சி (Revolution in Policy and Principle), இலக்கியப் புரட்சி (Revolution in Literature), கலைப் புரட்சி (Revolution in Arts), சமுதாயப் பழக்கவழக்கப் புரட்சி (Revolution in the Social Customs and Manners), ... என்று அனைத்திலும் புரட்சிகளை விளைவித்து முடிவில் முழுமையான பண்பாட்டுப் புரட்சி (The Total Cultural Revolution) உருவாக்கவே விரும்புகிறார்.

**ஆனால், அனைத்து வகையான புரட்சிகளும் அருள் வழியில், அன்பு வழியில், அமைதி வழியில், அற வழியில் ஆக்கப் பூர்வமாகவே நடைபெற வேண்டும்! நடைபெற வேண்டும்! நடைபெற வேண்டும்! நடைபெற்றேயாக வேண்டும்!** என்பதுதான் நமது குருதேவராகிய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் கொள்கையும் குறிக்கோளுமாகும். இப் பேருண்மையினை நம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், பிறருக்குப் புரிய வைக்க வேண்டும் என்றால்; ஆங்காங்கே நடைபெறும் சுடலைப் பூசைகளிலும் அருட்கோட்ட ஓம, ஓக, யாக, யக்ஞ, வேள்விகளிலும் **கட்டாயமாக அனைத்து மக்களுக்கும்** அருளை அநுபவப் பொருளாக ஏதேனும் ஒரு வடிவில் (அருளூறு பூசனைப் பொருட்கள், முடிகயிறு, தாயத்து, சக்கரம், படங்கள்) வழங்கியேயாக வேண்டும், வழங்கியேயாக வேண்டும், வழங்கியேயாக வேண்டும். எனவேதான், திருநெல்வேலியில் நடைபெறும் சுடலைப் பூசை; யாருக்கும் பயனளிக்காமல் வெற்று ஆரவாரமாகவோ, வெற்று ஆர்ப்பாட்டமாகவோ வீணாகி விடக் கூடாது என்று எச்சரிக்கிறோம்.

4) அதாவது இப்பொழுது பெருங் கூட்டமாகச் சுடலைக்கு வருகின்ற மக்கள்; ஆரம்பக் காலத்தில் சிலர் சிலராக வந்துதான் பெருங்கூட்டமாயினர் என்பதை நீங்கள் மறக்கக் கூடாது; மறுக்க முடியாது. இங்கு நீங்கள் சிந்திக்க வேண்டும். இப்பொழுது பெருந்திரளாக; அதாவது கணிசமான அளவு மக்கள் உங்களை நம்பிச் சுடலைப் பூசைக்கும், மற்ற பூசைக்கும் வருகிறார்கள் என்றால்; இது, ஏதோ தெய்வாதீனமாக, அல்லது எதிர்பாராத விதமாக அல்லது அருளுலகத்தவரின் அன்பினால் அல்லது உங்களின் பெருமுயற்சிகளால், ... இவ்வளவு பெரிய கூட்டம் வருவதாக நினைத்து விடாதீர்கள்.

உண்மையில் நாடெங்கும் மந்திறவாதிகளும், மந்திரவாதிகளும், சித்து விளையாடல்காரர்களும், மை வேலைக்காரர்களும், குறிகாரர்களும், தவறான உடுக்கை அடிக்கும் பூசாறிகளும், ... அதிகமாகி மக்களுக்குத் தொல்லைகளும், துன்பங்களும், ஏமாற்றங்களும், எரிச்சல்களும், மெய்யான அருளுலக ஏக்கங்களும், ... விளைவித்து விட்டார்கள். இதே நேரத்தில் ஆங்காங்கே இலைமறை காயாக ஒருசில மெய்யான அருளாளர்களும் வெளிப்பட்டுச் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். இவற்றால்தான் பொதுவாக மக்களிடையில் அருளுலகைப் பற்றிய உண்மைகளை, மெய்யான செய்திகளை, தெளிவான வரலாறுகளை, ... எல்லாம் தெரிந்து கொள்ளும் ஆர்வமும், அக்கறையும் காட்டுத் தீ போல் பிறந்து விட்டது, பிறந்து விட்டது, பிறந்து விட்டது.

எனவேதான், நாத்திகர்கள், கடவுள் மறுப்பாளர்கள், கம்யூனிசுட்டுகள், பகுத்தறிவுவாதிகள், சீர்திருத்தவாதிகள், படித்தவர்கள், படிக்காத பாமரர்கள், ... என்றுள்ள அனைவருமே ‘அருளுலகம், அருளுலக அறிவியல்கள், அருளுலகக் கலைகள், அருளாளர்கள், அருளூறும் நிலையங்கள், வழிபாட்டு முறைகள், பூசாமொழிகள், பூசாவிதிகள், பத்தி இலக்கியங்கள், மத வரலாறுகள், மத நூல்கள், ...’ என்று

அனைத்தையும் பற்றி அருளுணர்வோடும் (With a Spritualistic attitude), பொருளியல் உணர்வோடும் (With a Materialistic attitude), பகுத்தறிவு உணர்வோடும் (With a Rationalistic and Radicalistic attitude), ... ஆராய, அறிய, முயல ஆரம்பித்து விட்டார்கள், முயல ஆரம்பித்து விட்டார்கள், முயல ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால், அருளுலகம் இருண்டு கிடக்கிறது; இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு உள்ளும் இருள் இருக்கிறது. எனவேதான், இன்றைக்கு மேம்போக்காக மத மறுமலர்ச்சியும், பத்தியுணர்வு விழிச்சியும் நல்ல செழிச்சி நிலையை அடைந்திருப்பது போல் தோற்றமளிக்கின்றன. ஆனால் நமது சமுதாயத்தையும், அரசியலையும் நாத்திகர்களும், கடவுள் மறுப்பாளர்களும், மக்கள் நல விரோதிகளும், துரோகிகளும், ஏமாற்றுக்காரர்களுமே அதிக அளவில் தலைமை தாங்கி முன்னின்று வழி நடத்துகிறார்கள். இந்தப் பேருண்மையினை எண்ணிப் பார்க்கக் கூடிய சிந்தைத் தெளிவோ, நெஞ்ச உறுதியோ, உணர்வுத் தரமோ, அறிவுச் செறிவோ, கொள்கை உரமோ, குறிக்கோள் நேர்மையோ, பொதுநல நாட்டமோ, ... உடையவர்கள் ஏறத்தாழ, அநேகமாக அருளுலகிலும் இல்லை, பொருளுலகிலும் இல்லை. இதுதான் உண்மை! உண்மை! உண்மை!

இதற்கெல்லாம் காரணம் இன்றைய அருளுலகம் பெரும்பாலும் குருடர்களும், நொண்டிகளும் இருட்டு வீட்டுக்குள் தொட்டுப் பிடித்து விளையாடுவது போல் இருக்கிறது. பொருளுலகமோ, யார் பெரிய திருடர் அல்லது பெரிய கொள்ளைக்காரர் என்பதை நிலைநாட்டும் திறமைப் போட்டியில் இருக்கிறது. இந்த நிலையில் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு மேல் காட்டில் வாழ்ந்திட்ட குருதேவர்; உலக மக்களையோ! ஆசிய மக்களையோ! இந்தியத் துணைக்கண்ட மக்களையோ! தென்னிந்தியத் திராவிட மக்களையோ! தங்களை மறந்து அடிமை

வாழ்வு வாழும் தமிழக மக்களேயோ! தட்டியெழுப்பும் முயற்சியும், மறுமலர்ச்சிக்குப் பயிற்சி கொடுக்கும் முயற்சியும், பண்பாட்டுப் புரட்சிக்குப் பக்குவப்படுத்தும் முயற்சியும் எந்த அளவில்? எப்படியெப்படி? ... வடிவம் பெறும்? வாழ்வு பெறும்? முடிவெய்தும்? என்பதனை நம்மவர்களாவது சிந்திக்க வேண்டும், சிந்திக்க வேண்டும், சிந்திக்க வேண்டும், சிந்தித்தேயாக வேண்டும்.

அப்பொழுதுதான் பல்வேறு வகையான அலுவல்களுக்கும், தொல்லைகளுக்கும், எதிர்ப்புக்களுக்கும், சோதனைகளுக்கும் இடையில் நமது குருதேவர் அன்றாடம் தமக்கு வரக்கூடிய இருபது முப்பது அஞ்சல்களுக்கும், பல புதியவர்களுக்கும், சில பழையவர்களுக்கும் பதில் வழங்கிச் செயல்படுவதோடு; மின்னல் வேகச் சுற்றுப்பயணமாக மாதம் ஒருமுறை அல்லது இருமுறை தமிழகம் முழுவதும், தமிழகம் கடந்தும் சுற்றி வந்து எல்லாவகைப்பட்ட மக்களையும் நேரில் சந்தித்து அனைவருக்கும் உரிய அளவாவது நன்மைகளை விளைவித்து வருகின்றார் என்பதன் அருமையும், பெருமையும் புரிந்திடும்! புரிந்திடும்! புரிந்திடும்! எனவே, இனிமேலாவது தங்களிடம் உள்ள குருதேவரின் அஞ்சல்களையும், கட்டுரைகளையும், அச்சிட்ட வெளியீடுகளையும், இதுபோல் அவ்வப்போது குருதேவர் அனுப்பும் அஞ்சல்களையும் திரும்பத் திரும்பப் படித்தும், பிறருக்கும் படித்துக் காட்டியும் செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும், செயல்பட்டேயாக வேண்டும்.

5) பல அருளாளர்களும், அருள்நிலையங்களும், வழிபாட்டுக் கூடங்களும், நிலையங்களும் குறிப்பிட்டக் காலக்கட்டங்களில் மட்டுமே மக்களால் பெரிதும் விரும்பப்பட்டும், நம்பப்பட்டும் ஓகோ என்று புகழ் பெறுகின்றன. பிறகு, படிப்படியாக அவைகள் இருந்த இடமே தெரியாமல் போய் விடுகின்றன. இப் பேருண்மைகளைக் கடந்த கால உலக வரலாறுகள் விளக்குவதோடு மட்டுமல்லாமல்;

இன்றைய நமது கால வரலாறுகளே அல்லது வரலாற்று நிகழ்ச்சிகளே விளக்குகின்றன! விளக்குகின்றன! விளக்குகின்றன! இதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!!

நண்பர்களே! அண்மையில் கடந்த 20 ஆண்டுக் காலத்தில் திடீரென்று எத்தனையெத்தனை கோயில்கள் புகழ் மங்கியிருக்கின்றன? எத்தனையெத்தனை அருளாளர்கள் திடீர் திடீரென்று தோன்றி புகழ் பெற்று வந்திருக்கிறார்கள்? புகழ் மிக்க அருளாளர்களில் எத்தனையெத்தனை அருளாளர்கள் மிக விரைவில் புகழ் நலிந்து தேய்ந்து ஓய்ந்து இருந்த இடம் தெரியாமல் ஆகியிருக்கிறார்கள்? ... என்று வினாவெழுப்பிச் சிந்தித்துப் பாருங்கள்.

அப்பொழுதுதான் உங்களுக்கு இம்மண்ணுலகை விட மூத்ததாய் இருக்கக் கூடிய அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர் மடம், பீடம், ... பற்றிய அருமை பெருமைகளை ஓரளவாவது உணர முடியும்! உணரமுடியும்!! உணரமுடியும்!!! அப்படி உணருபவர்கள் நம்மில் எண்ணிக்கையில் பலராகிடல் வேண்டும். அப்பொழுதுதான், அருளாட்சி அமைப்புப் பணியும், அருட்பணி விரிவாக்கத் திட்டப் பணியும், உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுப் பணியும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் பணியும், இந்து மறுமலர்ச்சி இயக்க வளவளர்ச்சிப் பணியும், பதினெண்சித்தர்களின் இந்துமத ஆட்சிமீட்சிப் பணியும், பொதுவாக உலக மக்கள் அனைவரும் அருளுலக அறிவும், பயிற்சியும், பயனும் அடைய வேண்டும் என்ற குறிக்கோளும், ... நம் காலத்திலேயே கணிசமான அளவாவது; அதாவது தேவையான அளவாவது செயலளவில் வெற்றி பெறும்! வெற்றி பெறும்!! வெற்றி பெறும்!!!

6) மேலே குறித்த அனைத்தையும் பொறுப்பாகவும், பொறுமையாகவும் பலமுறை திருப்பித் திருப்பி நிதானமாகப் படித்து; முறையாகவும்,

நிறையாகவும் சிந்தித்து உணர முற்படுங்கள், உணர முற்படுங்கள், உணர முற்படுங்கள். அதற்குப் பிறகாவது, இரண்டு பெரிய நோட்டுப் புத்தகங்கள் (பேரேடு); அன்றாடப் பூசைகளிலும், வாரப் பூசைகளிலும், மாதப் பூசைகளிலும் பங்கு பெறக் கூடியவர்களின் முழுமையான பெயரை முகவரிகளை, அவரவர் கையெழுத்தில் தேதியுடன் மிகத் தெளிவாக எழுதச் சொல்லி ஒரு நோட்டுப் புத்தகத்தில் தொகுத்திடுங்கள். இவர்களை யெல்லாம் வசதிப்படி இ.ம.இ., அ.வி.தி. இளைஞரணி, தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள் முதலியவற்றில் உறுப்பினராகச் சேர்க்க முற்படுங்கள்.

7) மற்றொரு பேரேட்டில் உங்களிடம் பரிகாரப் பூசைக்காக வருபவர்களைப் பற்றிய விவரங்களைத் தொகுத்திடுங்கள். அதேபோல், சுடலைப் பூசைக்கு வருகிறவர்களின் விவரங்களைத் தொகுத்திடுங்கள். அவர்களெல்லாம் 11 வாரம் கண்டிப்பாக வந்து அருள் நலம் பெற்றுச் செல்லச் சொல்லுங்கள். இதற்கு மேலாக, உங்கள் மாவட்டத்தில் எந்தப் பூசை எங்கு நடந்தாலும் அதுபற்றிய விவரம், தேதி, கிழமை, மாதம் முதலியவற்றைக் குறித்து அதில் கலந்து கொண்டவர்களின் கையெழுத்தை வாங்கிடுங்கள். பூசை முடிந்த மறுநாளே பூசை பற்றிய விவரங்களை தலைமைப்பீடத்திற்கு எழுதி அனுப்புங்கள். தொடர்ந்து 5 வாரங்கள் பூசைக்கு வந்தும் ஒருவிதமான பயனும் ஏற்படவில்லை என்பவர்களின் குறிப்புக்களை விசாரித்து எழுதுங்கள். அப்பொழுதுதான் எப்படி யெப்படி அருள் வழங்க வேண்டும் என்பதைத் தெரிவிக்க முடியும். அதற்கான ஏற்பாடுகளையும் செய்ய முடியும்.

<u>குறிப்பு:-</u>

a) யாராக இருந்தாலும் <u>பாதிப்பு</u> நாள் பட்டதாகவோ அல்லது கடுமையானதாகவோ இருந்தால் உடனடியாக அவரது வீட்டின் உயரத்தை விட உயரமான கொடி நட்டு மெய்ஞ்ஞானக்கொடி

ஏற்ற வேண்டும். அல்லது மாடியின் மீதோ கொடி கட்டி மெய்ஞ்ஞானக் கொடியைப் பறக்க விட வேண்டும்.

b) பாதிக்கப்பட்டவர்களும் அல்லது அக் குடும்பத் தலைவன், தலைவியாவது செவ்வாடை அணிய வேண்டும்.

c) ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீக சக்கரங்கள் வைத்த படங்களை தலைமைப்பீடத்திலிருந்து பெற்று வீட்டில் எல்லா அறைகளிலும் வைக்க வேண்டும்; பூசையறையில் கட்டாயம் வைக்க வேண்டும். (குறைந்தது 3 படங்கள் வைக்க வேண்டும்).

8) சுடலைகளை எல்லாம் அருளாட்சிக்காகப் புத்துயிர்ப்பு செய்கிறோம் என்பதனால் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் மூலம் பெற்ற சக்கரங்கள் வைத்து சுடலையில் சிறிய மாடக்கோயில் (விளக்கு மாடம்) கட்ட வேண்டும். அதற்கருகில் ஆள் உயரத்தை விட சற்று அதிக உயரமுள்ள; அதாவது குறைந்தது 8 அடி திரிசூலம் செய்து; (7 அடி உயரம் வெளியிலும்; 1 அடி மண்ணுக்குள்ளும் இருக்குமாறு) ஒவ்வொரு சுடலையிலும் நட வேண்டும். அப்பொழுதுதான் சுடலை ஆண்டிச்சி, ஆறு வகைப்பட்ட சுடலை ஈசுவரிகள், மோகினிகள், இடாகினிகள், பிடாரிகள், இயக்கிகள், காடேறிகள், மாடேறிகள், துருசுகள், குறளிகள், மாடன்கள், சுடலை ஆண்டிகள், ... முதலியோர்கள் எல்லாம் பொதுமக்களுக்கு நன்மை செய்யும்படி செய்ய முடியும். மேலும் மந்திரவாதிகள், மக்களுக்கு தீங்கு செய்யக் கூடிய தவறான தீய அருளுலகக் கலைஞர்கள், ... முதலியவர்கள் எல்லாம் சுடுகாடுகளில் வந்து தங்களுடைய பூசைகள் செய்வது தடுக்கப்பட்டு விடும்.

அதாவது பொதுவாக பேய், பிசாசு, பில்லி, சூனியம், ஏவல், செய்வினை, வைப்பு, கழிப்பு, மருந்து, ... முதலிய பல்வேறு வகையான தீய செயல்களைச் செய்பவர்கள்; பெரும்பாலும் கடைசி நிறைவு பூசையை சுடுகாடுகளில்தான் செய்வார்கள். அதனால் சுடலையில்

திரிசூலம் ஊன்றி தீயவர்கள் பூசை செய்ய முடியாமல் செய்து விட்டால் சமுதாயத்திற்கு தீமைகள் விளையாமல் செய்து விடலாம்.

9) பொதுவாக சுடலைக்கு செல்பவர்கள்; தங்களுடைய குடும்பத்தில் மாண்டு போன முன்னோர்களுக்கு விருப்பமான உணவுகளை அமாவாசையில் பகலிலும், முழுநிலவு நாளில் இரவிலும் படைத்து வழிபாடு செய்வது பழக்கம். மற்றபடி ஊர் மக்கள் எல்லோருமே நான்கு யுகமாக குருநாளான வியாழக் கிழமையில் ஒன்றுதிரண்டு கூட்டமாகச் சுடுகாட்டிற்கு சென்று கூட்டு வழிபாடு செய்து விட்டு வருவதுதான் வழக்கம். அப்படி வழிபடும் போது சாம்பிராணி புகை அல்லது ஊதுபத்தி புகை காட்டி அந்தந்த ஊரிலுள்ள குருமார் வந்து குருபாணி ஓதுவார். அல்லது குருக்கள் வந்து அருட்சினைக்குரிய அருளூறு வாசகம் ஓதுவார். அல்லது குரு வந்து அருளுரை ஆற்றுவார். அல்லது பூசாறி வந்து இசைக் கருவியோடு பூசாமொழி வாசகங்கள் ஓதுவார். இப்படி நடைபெறும் வழிபாடு கால் சாமம் முதல் ஒரு சாம நேரம் வரை நடப்பது வழக்கம். (அதாவது சுமார் ¾ மணி நேரம் முதல் 2½ மணி நேரம் வரை).

இப்படி நான்கு யுகங்களாக நடந்து வந்த சுடுகாட்டு தொழுகை முறை, பூசை முறை, வேண்டல் முறை, ... எப்படியோ தடைப்பட்டுப் போய்விட்டதால்தான் இந்துமதம் வீழ்ச்சியுற்றது; இந்துக்கள் தாழ்ச்சியுற்றனர்கள்; இந்துமதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்கள் தங்களையே மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும் அடிமைகளானனர்கள்!! கூலிகளானனர்கள்! எனவே, இன்றைக்கு அருட்பணி விரிவாக்கத் திட்டப் பணிக்காகவும், அருளாட்சி அமைப்புப் பணிக்காகவும், தமிழின மொழி மத விடுதலை இயக்கத்துக்காகவும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்காகவும் உழைக்கப் புறப்பட்டிருக்கும் அருட்கொடை வள்ளலான, அருளாட்சி நாயகமான,

தத்துவ நாயகமான ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்; தாம் உருவாக்கியுள்ள ஆயிரக்கணக்கான சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் மூலம் உடனடியாக தமிழகம் முழுவதும் சுடலைப் பூசைகள் மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும் அடையச் செய்துள்ளார். அதன்படிதான் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சுடலையில் பூசைகள் நடைபெறுகின்றன. இப் பேருண்மையை உணர்ந்தும், உணர்த்தியும் செயல்பட வேண்டும்.

10) சுடலைப் பூசைகள் பெரும்பாலும் இரவில்தான் நிகழ்த்தப் பட்டு வருகின்றன. சுடலைப் பூசையை நிகழ்த்துபவர்கள் அவரவர் வசதி வாய்ப்புக்கேற்ப புரு, கோழி, ஆடு, மீன், ... முதலியவைகளைப் பலியிட்டும்; முதலியவற்றை வீட்டிலிருந்து சமைத்துக் கொணர்ந்தும்; சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், சுண்டல், பழவகைகள் முதலியவைகள் படைத்தும் பூசைகளை செய்வது இயல்பாக இருந்து வருகிறது. இதில் எந்தவிதமான சட்டதிட்டக் கட்டுப்பாடும் இல்லை. ஆனால், மிகுதியாக குருதிப்பலி பூசையும், இறைச்சி உணவுப் பூசையும்தான் ஆற்றலுடையதாகவும், பயனுடையதாகவும் இருக்கின்றன.

11) சுடலைப் பூசைக்கு **பிணம் எரிகின்ற ஏமத்தீயையே** வழிபாட்டுக்குரிய சோதியாக பயன்படுத்தும் மரபு மிகுதியாக உண்டு. மேலும் அந்த ஏமத்தீயில்தான் (ஈமத் தீ என்பது வேறு) அவிர்ப்பலிகளை எல்லாம் இடுவது மரபாக இருந்து வருகிறது. ஆனால், பதினெண்சித்தர் பூசாவிதிகள், சாத்தர, சாத்திர, சாத்திறங்கள், ஐந்தர, ஐந்திர, ஐந்திறங்கள், ... முதலிய நூல்கள் **பழம்பெரும் மாமூதூர் சுடுகாடுகளை ஆராய்ந்து; அவற்றின் தன்மைகளுக்கேற்ப ஓம குண்டங்கள், ஒக குண்டங்கள், யாக குண்டங்கள், யக்ஞ குண்டங்கள், வேள்வி குண்டங்கள், ... முதலியவற்றில் ஏதாவது ஒரு வகையை அமைத்துத்தான் பூசை செய்யவேண்டும் என்று மிகமிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அதிலும், குறிப்பாக அந்தந்த சுடலைகளில் உள்ள**

**<u>அத்தாக்கள், அப்பன்கள், அம்மைகள், அண்ணுக்கள், அல்லாக்கள், ஆண்டவர்கள், இயவுள்கள், இறைகள், எல்லாக்கள், ஐயன்கள், கடவுள்கள், தெய்வங்கள், ... முதலியவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நெருப்புக் குண்டங்கள் வட்ட வடிவம் முதல் எண்கோணம் வரை அவ்வப்போது ஆராயப்பட்டே அமைக்கப்பட வேண்டும் என்ற ஓர் எச்சரிக்கை அமைப்பு உள்ளது.</u>**

12) குருதேவரின் அன்புக்கும், தோழமைக்கும், நட்புக்கும், பாசத்துக்கும், நம்பிக்கைக்கும் உரிய சித்தரடியான்களே! சித்தரடியாள்களே! சித்தரடியார்களே! இந்த நெடிய அஞ்சலில் காணப்படும் மறைகளையும், முறைகளையும், நெறிகளையும், விதிகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், சாத்திற சம்பிறதாயச் சடங்கியல்களையும், சமயச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், சமய மரபுகளையும், ... எண்ணிக் கலங்க வேண்டாம்! குழம்ப வேண்டாம்! தயங்க வேண்டாம்! மயங்க வேண்டாம்!...

உங்களுக்கு குருதேவர் மீது மெய்யான, தூய்மையான, வாய்மையான அன்பும், பத்தியும், நம்பிக்கையும் இருக்குமேயானுல் குருவை நினைத்து துணிந்து செயல்படுங்கள். உங்களில் யாரும்; **"உங்களுக்குள் குருதேவர், குருதேவருக்குள் நீங்கள்"** என்ற தத்துவத்தை மட்டும் உணரவும், நம்பவும் தவற விடாதீர்கள். எனவே, <u>அனைத்தையும் குருவாணைப்படிச் செய்யுங்கள்; குருவின் துணையோடு செய்யுங்கள்; குருவின் வழிகாட்டலின்படிச் செய்யுங்கள். குருபீடம் பெற்ற பயிற்சியையே முயற்சியாக்குங்கள்</u>, குருபீடம் பெற்ற பயிற்சியையே முயற்சியாக்குங்கள், குருபீடம் பெற்ற பயிற்சியையே முயற்சியாக்குங்கள். அதன் விளைவு எங்கும் வெற்றி! எதிலும் வெற்றி!! எல்லாம் வெற்றி!!! என்பதாகவே இருக்கும்.

**குருவே துணை! குருவே எல்லாம்!**

**குருவே அனைத்துக்கும் கரு!**

**குருவே தருவாகவும் திருவாகவும் விளங்குகிருர்! .....**

என்ற கருத்தோட்டங்களுக்கு விளக்கமாகவே!... செயல்வடிவமாகவே இருப்பவைதான் சுடலைப் பூசைகள். எனவே, அன்புகூர்ந்து தமிழகம் முழுவதுமுள்ள நமது இயக்க உறுப்பினர்கள் மட்டுமாவது; அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ்; நாடெங்கும் நடைபெறுகின்ற சுடலைப் பூசைகளை கூடுமானவரை குருதேவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நிகழ்த்திடுங்கள்! நிகழ்த்திடுங்கள்! நிகழ்த்திடுங்கள்! **இல்லாவிட்டால் நமது வெற்றிகள் காட்டாற்று வெள்ளம் போல் நிலைத்த பயனைத் தராமல் போய்விடும்.**

இது ஓர் எச்சரிக்கை அறிவிப்பு அல்ல; இது ஓர் அன்பு அறிவிப்பு வேண்டுகோள்.

**குறிப்பு:-**

**குருதேவர் யாருடைய காட்சியிலும் தோன்ற மாட்டார்; கனவிலும் வரமாட்டார்; யார் மீதும் அருளாக இறங்கியோ, அல்லது மருளாக இறங்கியோ செயல்பட மாட்டார்! செயல்பட மாட்டார்!! செயல்பட மாட்டார்!!! செயல்படவே மாட்டார்.** இப் பேருண்மையினை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்; அனைவருக்கும் உணர்த்தவும் வேண்டும். ஏனென்றால், சிலர் குருதேவரின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஏமாற்றுவதாகவும்; தவறு செய்வதாகவும் தலைமைப்பீடத்திற்கு செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. எச்சரிக்கை! யாரும் ஏமாற வேண்டாம்!

எந்தவிதமான ஐயப்படத் தக்க செய்திகளாக இருந்தாலும்! அல்லது புரியாத கருத்துக்களாக இருந்தாலும் உடனடியாக தலைமைப்பீடத்திற்கு அஞ்சல் மூலம் எழுதிக் கேட்டுத் தெளிவான விளக்கம் பெற்றுக் கொள்ள வேண்டும். தலைமைப்பீடத்திலிருந்து வரும் விளக்க அஞ்சல்களின் இறுதியில் குருதேவரின் கையொப்பம்

இருந்தால்தான் நம்ப வேண்டும். இல்லையெனில் குருதேவருக்கு எழுதித்தான் தங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இது அன்புநிறை எச்சரிக்கை அறிவிப்பு வேண்டுகோள் திருவோலை.

**(ஒப்பம்)**
**அன்பு**
**இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம்,**
**ஞானாச்சாரியார், நான்குயுக நாயகம்,**
**பரப்பிறம்மம், குருதேவர்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
22/11/88, செவ்வாய்க்கிழமை இரவு 10.25.

**//உண்மை நகல்//**

<u>நகல் நல்குபவர்:-</u>

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, சித்தரடியார் சீ.மணி, 24/11/88 பகல் 1.20 மணி.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருதது.//**

# செயல் விளக்கத் திருவோலை

தலைமைப்பீடம்,
22.5.88.

தென்மண்டல அ.வி.தி. தலைவருக்கு விடுக்கப்படும் செயல் விளக்கத் திருவோலை.

அன்பு மகனும், தம்பியுமான அருள்மிகு மதுரை மாமூதூர் ஆலவாய் தத்தனேரி சுடலைப்பத்திற காளி சன்னிதானம் ச.துரைராசன் B.Sc., அவர்கள் சமூகத்திற்கு,

(1) யாவும் நலமாகட்டும், வெற்றியாகட்டும்.

(2) தங்களின் பேரார்வமும், பெருந்திறனும், அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி, ஒருமைப்பாட்டுடன் செயல்படும் தரமும் ஏற்றுப் போற்றப்படுகின்றன, மதிக்கப்படுகின்றன. இவை மென்மேலும் வளர வேண்டும். சிறந்த பயனைத் தர வேண்டும். தமிழ் இனத்துக்கும், மொழிக்கும், நாட்டுக்கும் நிலையான பயனையும், பெரும் புகழையும் நல்க வேண்டும். குருவைப் புரிந்தும், குருவாணையை ஏற்றும், குருவின் துணையை முழுமையாக நம்பியும், குருவின் வழிகாட்டலை அப்படியே பின்பற்றியும் சிறந்து செயல்படுமாறு வாழ்த்துகிறோம்.

(3) திருநெல்வேலியில் தொடர்ந்து யாருமே அ.வி.தி. பணிக்கு வரவில்லை என்று வருத்தத்துடன் செய்தி வந்து கொண்டேயிருக்கிறது. திருநெல்வேலி வட்டாரம் கணிசமான அளவாவது வளர்ச்சி பெற்றிட்டால்தான் நமது இயக்கம் சமய வளர்ச்சி நிலைகளையும், சமுதாய வளர்ச்சி நிலைகளையும் முழுமையாகச் செயலாக்கக் கூடிய அரசியல் வளர்ச்சி நிலைக்குச் செல்ல முடியும். எனவே, தாங்கள் தென்மண்டல இ.ம.இ. தலைவர், செயலாளர், நிர்வாகக் குழுவினர், செயல்வீரர்கள், பெரியவர் முதலியவர்களுடன் கலந்து விரைந்து

பயிற்சி முகாமிற்கு முன்னரே திருநெல்வேலி வட்டாரத்தில் சுற்றுப்பயணம் செய்தேயாக வேண்டும். அதன்மூலம் சிலராவது திருநெல்வேலி வட்டாரத்திலிருந்து பயிற்சி முகாமிற்கு கலந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது தாங்கள் புதன், வியாழன், வெள்ளி மூன்று நாட்களும் சென்னை வந்து எம்மோடு தங்கியிருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். இதன்படித் தாங்கள் சென்னை வருவதால் தங்களுக்கு எவ்விதமான புதிய நன்மையும் ஏற்படப் போவதில்லை. ஆனால், தாங்கள் இங்கு வருவதை விட்டு திருநெல்வேலி சென்றால் இயக்கத்திற்கு மிகவும் ஆக்கப்பூர்வமாக இருக்கும். (குருதேவரும் அதைத்தான் விரும்புகிறார்.) நலம் விசாரித்துக் கொண்டு காலத்தையும், கருத்தையும் வீணாக்கக் கூடாது. இப்படி யாம் எழுதுவதற்கு வருந்த வேண்டாம்.

(4) மாதமிருமுறை வளர்பிறையிலும், தேய்பிறையிலும் எம்மை வந்து கண்டு அருள் பெற்றும், கருத்து விளக்கங்கள் பெற்றும், அவ்வப்போது தேவையான பயிற்சிகளை சிறிதுசிறிதாகப் பெற்றும், கட்டாயமாகப் பெரியவரும் நீயும் பயணச் செலவில்லாமல் இரயில்வே (பாஸ்) மூலம் வந்து சென்று பெற்றுச் செல்ல வேண்டும். ஏனெனில், நம்மவர்களில் பலருக்குப் பொருளாதார வசதியில்லை. அதாவது எல்லோரையும் அடிக்கடி சென்னை வந்து செல்லுமாறு கூறவியலாது. பயிற்சி பெற்றுச் செல்லும் நீங்கள் பலருக்கும் பயிற்சியளித்திடல் வேண்டும். அதேபோல் எம்மிடமிருந்து அருள் பெற்றுச் செல்லும் நீங்கள் பலருக்கும் அருள் தரல் வேண்டும். இதுதான் எமது செயல்திட்டம்.

**குறிப்பு:-** முடிந்தால் பெரியவர் தமது பணியாளராகப் பயணத்தில் அறிவித்து நம்மவர்களில் ஒவ்வொருவராக இணையாக அவ்வப்போது எம்மிடம் அழைத்து வந்தால் அவர்களையும் உங்களுக்கு அருளும், பயிற்சியும் வழங்கித் தயாரிப்பது போல் தயாரித்திடலாம்.

(5) யாம் இம்மாதம் 4-5-88 புதன்கிழமை காஞ்சிபுரத்திலிருந்து சென்னை திரும்பும்போது செம்பரம்பாக்கம் ஏரிக்கரையில் பகல் 12:30 மணியளவில் நமது அருளுலகப் பகைவர்களாலும், எதிரிகளாலும், உலக தீய சத்திகளாலும், கொடிய மந்திரவாதிக் கும்பல்களாலும் நிகழ்ந்து வரும் அருட்போரின் கன்னிப்போர் எதிரிகளாலும், நேரடியாகத் திடீர் தாக்குதல் நிகழ்த்தப்பட்டு; யாம் ஏறி வந்த B.பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்து எதிரில் வந்த லாரி ஒன்றால் நேராக மோதி வண்டிக்குப் பெரிய சிதைவு ஏற்பட்டு; வண்டியின் அருகிலுள்ள 15 அடி ஆழப் பள்ளத்துள் வீழ்த்தப்பட்டு எம்மையும், எமது மனைவியையும், எம்முடன் இருந்த எமது வளர்ப்பு மகன்களுள் ஒருவனான சீனிவாசனையும் (பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம்) அழித்து மீண்டும் நாங்கள் தப்பி விடாமல் இருப்பதற்காகப் பேருந்தில் பயணம் செய்த அறுபது பேர்களையும் பலியாக்கிட மாபெரும் கொலை முயற்சியைச் செய்திட்டார்கள்.

சிதைவுக்குள்ளான பேருந்து பள்ளத்தில் கவிழும் நிலையில்தான் யாம் சுயநினைவு பெற்றோம். அப்பொழுது விண்வெளியிலிருந்து நீண்டு வந்த ஒரு கை பேருந்தை அலாக்காக மேலே தூக்கி நிறுத்திற்று. அந்த உள்ளங்கையிலிருந்த அருள்ரேகையைக் கண்டுதான்; அது எனது தாத்தா நமது தாத்தா அருள்மிகு தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் என்பதைக் கண்டு கொண்டேன், மெய் சிலிர்த்தேன், திகைத்தேன்; அவருடைய பேரன்பையும், பேராதரவையும், அரிய துணையையும், எல்லையற்ற ஆற்றலையும் எண்ணி இந்த நொடி வரை நினைத்து நினைத்து மகிழ்ச்சிக் கண்ணீர் ஊற்றெடுக்கப் பெற்று இருக்கின்றேன்.

யாம், விளையாட்டுப் பிள்ளையாக மிகவும் பிடிவாதமாக வெறிகொண்ட போக்கில் எப்படியாவது இம்மண்ணுலகில் தோன்றிய பதினெண்சித்தர்

பீடாதிபதிகளில் ஒருவராவது பீடாதிபதிக்குரிய 108 அருட்பட்டங்களையும் பெற்றிட்டார்கள்; நிறைவாக வாழ்ந்திட்டார்கள் என்ற வரலாற்றுச் சாதனையை உண்டாக்க வேண்டும் என்ற கருத்தோட்டத்தில் பாரம்பரியமாக சந்திர குலத்திற்கும், சூரிய குலத்திற்கும் உரிய அளப்பரிய துணிச்சலோடு ஏற்பட்டிட்ட எண்ணற்ற எதிர்பாராத இடைஞ்சல்களையும், எதிர்ப்புக்களையும் கண்மூடித் தனமாக எதிர்த்துப் போரிட்டபடியே முன்பு '<u>அரசயோகம்</u>' செய்தது போல்; அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் என்ற அருட்பட்டத்துக்குரிய அனைத்தையும் சுமார் ஒன்றரை ஆண்டுக்கால எல்லையில் (18 மாதங்கள்) மிகப்பெரிய வெற்றியோடு செய்து முடித்தேன்.

ஆனால், அதனால் ஏற்பட்ட பெரிய பெரிய கொடிய விளைவுகளை எம்மால் சமாளிக்கவே முடியவில்லை. அவற்றையெல்லாம் எம் பொருட்டுத் தாமே ஏற்றுக் கடந்த நான்கு ஆண்டுக்கால இடைவெளிக்கு மேலாக நெடிய கடிய போரினைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருக்கிறார், எனது தஞ்சைத் தாத்தா. அவர் முறையாக தன் துணைவி ஆயாள் பொன்னிறப் பாவை தாய்லாந்து நாட்டு இளவரசி, பல்லவ இளவரசிகள் இருவருடனும் போர்க்கோலம் பூண்டு தேரேறிப் புறப்பட்டுச் சென்ற காட்சி, நிகழ்ச்சி இன்னும் எம் கண்முன் பசுமையாகவே இருக்கின்றது.

நான் அவரைக் கேட்காமல்; அதாவது அவர் என் மீதுள்ள பற்றாலும், பாசத்தாலும் எனக்கு ஆபத்து ஏதாவது ஏற்பட்டு விடக் கூடாது என்று அஞ்சி முன்பு அரசயோகம் செய்ய முற்பட்ட போது தடுத்தது போல்; இப்போது அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானப் பூசை செய்யும் போதும் தடுத்து விடுவாரோ என்றஞ்சித்தான் அவரிடம் ஒப்புதலும், சம்மதமும் பெறாமல் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானப் பட்டத்துக்குரிய பூசைகளையெல்லாம் செய்ய ஆரம்பித்துப் பாதியிலே சிக்கல்களும்,

சிரமங்களும் வந்த பிறகுதான் ஆயாவின் மூலம் அவருடைய முழுமையான துணையையும், உதவியையும் பெற்று வெற்றி பெற்றேன்.

எனக்குக் கிடைத்த அந்த மாபெரும் வெற்றியில் என்னைவிட அவருக்குத்தான் மகிழ்ச்சி அதிகமிருந்தது. ஆனால், கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல் அண்டபேரண்டத்தார்களின் எதிர்ப்பும், தாக்குதல்களும் மிகமிகக் கடுமையாகவும், கொடுமையாகவும் இருந்திட்டன. அப்பொழுது நமது திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் பெ.சுப்பையா அவர்களும், எமது ஏற்புச் செல்வன் கவிக்குமாரும், சூரப்பட்டு சண்முகமும், PTC து. சுப்பிரமணியமும், மற்றும் நமது அடியான்களில் பலரும் பெருந்துணையாக இருந்து நேரடியாகப் போரில் ஈடுபட்டு அத்திறங்களை ஏவிக் கடுமையானப் போரைச் செய்திட்டார்கள்.

இருந்தும் எம்மால் சமாளிக்க முடியாத கடுமையான நிலையில் தஞ்சைத் தாத்தா மூலம் சமாதான முறையில் அண்ட பேரண்டத்தார்களுடன் அனைத்தையும் சரி செய்து கொள்ள முயன்றோம். ஆனால், அவர்களோ தாத்தாவை யார் என்று புரிந்து கொள்ளாமல் தங்கள் போக்கில் போர் வெறி கொண்டே அனைத்து வகையான பேச்சுக்களையும் நிகழ்த்தினார்கள். அதனால், அதன் விளைவாக அண்டபேரண்ட அருட்போர் மூண்டு விட்டது. அது 1992க்குள்ளாவது முடிவு பெறுமா? என்று தெரியவில்லை.

அரச பாரம்பரியமும், குரு பாரம்பரியமும் ஆணையிடுவது போல்; யாம் அருளாட்சி அமைப்பதற்காக 1992 முதல் 1996 முடிய நிகழ்த்த இருக்கும் அருட்போருக்கு எனக்கு எல்லாவிதமான துணைகளையும், சத்திகளையும் வழங்குவதற்கு தாத்தா வர முடியாமல் போய் விடுமோ என்று சமீப காலமாக மிகவும் கவலைப்பட்டு, கலக்கமுற்று, ஓரளவு அச்சமும் பெற்று எமது செயல்கள் அனைத்திலும் தளர்ச்சியும், தயக்கமும், மயக்கமும் காட்டி வந்தோம்.

ஆனால், அது தேவையில்லை என்பதற்காகத்தான் இப்பொழுது அண்மையில் 4-5-1988இல் நடந்த விபத்தில் அண்டபேரண்ட அருட்போரில் ஈடுபட்டிருக்கும் நிலையிலும் தாத்தா தமது அருட்கரத்தை நீட்டி என்னைக் காப்பாற்றி விட்டார். (விபத்து நடந்த இடம்: காஞ்சிபுரம் to சென்னை வழியில் செம்பரம்பாக்கம் ஏரி மீது கெல்லிமேடு என்ற இடம். Bus Route No.76B, Point to Point, TCB 3366. Driver Name: Dayalan, Staff No. 4557, Conductor Deivasigamani, Staff No. 7442. Accident Time: 12:30 hrs.)

எனவேதான் நான் உடனடியாக நிகழ்ந்து வரும் அருட்கன்னிப் போரில் நேரடியாகவே பங்கு பெறவும், அண்டபேரண்டங்களிலிருந்து அதற்குரிய சன்னிதானம் என்ற முறையில் சத்திகளைப் பெறவும் அடிக்கடி எல்லா இடங்களுக்கும் தெரிவித்து எமக்காகப் பாதுகாப்புப் பூசைகள் செய்யுமாறு கூறுவதற்குப் பதில் யாமே எல்லோருக்கும் பாதுகாப்பு வழங்கும் வண்ணம் பேராற்றலுடன் விளங்குவதற்காகவும்; மீண்டும் பாலாற்றங்கரையிலேயே நெடியதோர் அருட்போரை முன்பு செய்தது போல் அல்லாமல் புதிய முறைகளில் பலரையும் பங்கு பெறச் செய்து ஏந்தரீக, தாந்தரீக சித்திச் சத்திகளை நேரடியாகவே அருட்போரில் போராயுதமாகவும், கவசமாகவும் பயன்படுத்திப் போரிடப் புறப்பட்டு விட்டேன்.

நான், கவிக்குமார், சீனிவாசன் மூவரும்தான் புறப்பட்டுச் சென்றோம். 15-5-88 முதல் 20-5-88 முடிய ஆறு நாட்கள் தொடர்ந்து இரவுபகலாக அருட்போரின் கன்னிப் போரில் பல்வேறு முனைகளில் தாக்குதல்களை நிகழ்த்தி மாபெரும் வெற்றிகளைப் பெற்றேன். 1359 அண்டங்களுக்கும் நேரடியான அருட்தொடர்பினையும் ஏழு பேர்களுக்கும் (1. சி.கவிக்குமார் B.Sc., 2. பெ.சுப்பையா B.E., 3. இரா.சீனிவாசன், 4. பொ.பிச்சைமணி, 5. A.L.சோலையழகன், 6. வேம்பை வெங்கடேசன், 7. முள்ளுக்குறிச்சி மூகாம்பிகை உணவகம் லோகநாதன்) கிடைக்குமாறு செய்தேன். இதனால் நமது அருட்போர்

தளபதி, சேனுதிபதி, நாயகம் என்பவர்களுடைய நிலே புதிய வலிமை பெற்று விட்டது.

இப்படியெல்லாம் அரிய சாதனேகளேச் சாதித்து விட்ட பிறகு உடல்நிலே பாதிக்கப்பட்டு விட்டது. இருந்த போதிலும், நம்மவர்கள் எங்கிருந்தாலும், எந்தப் பூசைகளேயும் வெற்றிகரமாகச் செய்யலாம், செய்து முடிக்கலாம் என்ற நிலே உருவாக்கப்பட்டு விட்ட மகிழ்ச்சியில் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறேம் யாம்.

(6) திருவரங்கத்தில் நடக்கவிருந்த பயிற்சி முகாமை 9 முதல் 12-6-88 முடிய இருந்ததை, 16 முதல் 20-6-88 வரை என்று ஒத்திப் போட்டு விட்டோம். உடல்நிலே காரணமாக இருந்த போதிலும், சேலம் மாவட்டத்தில் பல்வேறு இன்றியமையாக் காரணங்களால் உடல்நலக் குறைவுக்குமிடையிலே யாம் 3-6-88 முதல் 8-6-88 வரை சுற்றுப்பயணம் செய்ய ஒப்புக் கொண்டு விட்டோம். எனவே, யாம், மருத்துவர் ஆலோசனேப்படி மிகுந்த ஓய்வுக்காக படுத்தபடியே இருக்கிறேம். நீங்கள் சென்னேக்கு வந்து எம்மைப் பார்க்க மூன்று நாள் தங்குவதால் பயன் ஏதும் கிடையாது. எம்மைச் சந்தித்து உரையாடவும் முடியாது. எனவே, தாங்கள் இப்போதைக்குச் சென்னே வரத் தேவையில்லே. திருநெல்வேலி வட்டாரத்தில் பயணம் செய்தால்தான் நல்லது.

(7) இன்றைய நிலேயில் ஈசுவரி தேவியின் அருளாற்றல் மிக்க துணே நினேத்த போதெல்லாம் கிடைப்பதாக இருந்தால் மிகப் பெரிய, அரிய சாதனேகளேயெல்லாம் கூடச் செய்ய முடியும். ஆனுல், யாம் அனேத்தையும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல் என்று நினேப்பதால் இதையும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல் என்றே எண்ணுகிறேம். இப்பொழுது மிகமிகப் பெரிய வெற்றிகளும், பாதுகாப்புக்களும் கிடைத்தது போல் பல ஈசுவரி தேவிகளும் எதிர்பாராமல் கிடைத்து விடக் கூடும். எனவே, யார் மீதும் வருத்தப்படாமலும், எதற்கும் கவலேப்படாமலும் அனுவசிய

ஏமாற்றங்களையும், எதிர்பார்ப்புக்களையும் வளர்த்துக் கொள்ளாமல் ஊசிமுனையளவு ஈசுவரி தேவி யோகம் உடையவர்கள் கிடைத்தால் கூட அவர்களை உடனே முழுமையாக ஈசுவரி தேவிகளாக உருவாக்கிப் பூசைகளுக்குப் பயன்படுத்தி மாபெரும் வெற்றிகளைப் பெற ஆரம்பித்து விட்டோம்.

எனவே, அந்த வகையிலும் நமக்கு எந்த வகையான அவசரமோ, மதுரையிலிருந்து யாராவது வரவேண்டிய தேவையோ இன்றைய நிலையில் இல்லை. எனவே, நான் எதிர்பார்ப்பது போல் நீங்கள் N.S.சாமிநாதனுடைய நிச்சயதார்த்த விழா, திருமண விழா, மதுரைக்குள் இருப்பவர்களில் ஏறத்தாழ யாருமே குருதேவர் அறிக்கைச் சந்தா கட்டவில்லை என்ற நிலை மாற்றும் பணி, இ.ம.இ. உறுப்பினர்களைச் சேர்க்கும் பணி, திருப்பரங்குன்ற அருட்கோட்டம், வெளியூரில் உள்ள அருட்கோட்டங்களைக் கவனிக்கும் பணி, .... முதலியவற்றில் ஈடுபட்டு அடிக்கடி அஞ்சல் மூலமோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்க. திருவரங்கப் பயிற்சி முகாமிற்கு அதிக பேர்களை அழைத்து வர முயற்சி செய்யுங்கள். எனவே, யாம் மதுரைக்கு மீண்டும் வரக்கூடிய நல்ல சூழ்நிலையை உருவாக்குங்கள். இதை அனைவருக்கும் படித்துக் காட்டி ஒற்றுமையுடன் செயல்படுங்கள்.

அன்பு

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,**

23-5-88.

**//உண்மை நகல்//**

**<u>நகல் நல்குபவர்:</u>** அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியார் சீ.மணி, 25-5-88.

**//மூலம்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# அருட்பயிர் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளரப் பாடுபட வேண்டும்

அருள்மிகு சமயக்குரவர் நால்வர் சன்னிதானம் திரு த.கேசவன் (5, பழைய மாகாளிப்பட்டி ரோடு மதுரை-625001) அவர்களுக்கு ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் விடுக்கும் மடல்:

1. தங்களின் 21-3-88 தேதியிட்ட நெடிய அஞ்சல் கண்டோம். மிக்க மகிழ்ச்சி.

2. தாங்கள் கண்டது அனைத்தும் சரியே. தாங்கள் செல்கின்றீர்கள் என்றால் எம்மையறியாமல் யாம் தங்களுடன் வந்து விடுகிறோம். அதாவது எமது ஒன்றரை இலட்ச அணுப் பதிலிகளுள் யாராவது சிலர் வருகிறார்கள். தங்களுடைய குருபத்தியாலும், பயிற்சி முயற்சித் தேர்ச்சிகளாலும், பல நூறாயிரக் கணக்கான குருதேவரின் அணுப் பதிலிகள் தங்களுடன் வரவேண்டும். வாழ்த்துகிறோம் யாம்.

தாங்கள் எல்லோருக்கும் வழியாக, வழிகாட்டியாக இருக்க வேண்டும். தங்களின் அஞ்சல் இன்று செவ்வாய்க் கிழமை 22.3.88 இரவு 11 மணி சுமாருக்குப் படிக்கப்படும்போது தாங்கள் சமயக்குரவர் நால்வர் வடிவில் காட்சியளிக்கிறீர்கள். இந்தக் காட்சி மெய்யாக வேண்டும்.

3. தங்களுடைய நிலை மிகப்பெரிய நிலை. தங்களைப் போல் முற்பிறவிகளைப் பெருமளவில் தெரிந்து கொண்டவர்கள் ஏறத்தாழ இல்லையென்றே கூறலாம். அதாவது, ஆடிப் பதினெட்டில் காவிரியாற்றில்

புதுவெள்ளம் இரு கரைகளையும் தழுவி நிறைந்து செல்வது போல் தங்களுக்கு அருளாற்றல் ஆற்றுப் பெருக்காக ஓடுகிறது. அது அருளுலகத்தையும், தமிழ்நாட்டையும், உலகெங்கும் உள்ள இந்துமதக் கோயில்கள் அனைத்தையும் வளப்படுத்திட வேண்டும், நலப்படுத்த வேண்டும். தங்கள் அஞ்சல் கண்டவுடன் தங்களைப் பார்க்க பெரிதும் விரும்பினோம் யாம். தாங்கள் எப்போது வேண்டுமானாலும், தலைமைப்பீடம் வரலாம் என்ற சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது. தங்களுக்கு மேன்மேலும் வெற்றியுண்டாகக் குருதேவர் வாழ்த்துகிறார்.

4. தாங்கள் தென்மண்டலம் முழுவதும் இ.ம.இ., அ.வி.தி. சுற்றுப்பயணங்களைச் செய்ய வேண்டும். அதனால், தமிழ்நாட்டளவில் இயக்கத்தின் பொறுப்பு வகிக்க வேண்டும். நீங்களும் முத்தி பெற்றுப் பலரையும் முத்தி பெறச் செய்ய வேண்டும். அதாவது திருஞானசம்பந்தர் தம் திருமணத்தின் போது தோன்றிய அருட்பெருஞ்சோதியுள் தம் திருமணத்திற்கு வந்திருந்த அனைவரையும் இரண்டறக் கலக்கச் செய்ததோடு அந்த ஊர்ச் சுற்றுவட்டாரத்தார் அனைவரையுமே அச் சோதியில் கலக்குமாறு செய்தார் என்பதுதான் உண்மையான வரலாறு. அது உங்கள் காலத்தில் மீண்டும் நிறைவேற வேண்டும். வாழ்த்துகிறோம்.

5. தங்கள் மூலம் இ.ம.இ. உறுப்பினர்கள் குருதேவர் ஏட்டுக்கு சந்தாதாரர்கள், அ.வி.தி. உறுப்பினர்கள் மிகுதியாகச் சேர வேண்டும். இயக்க வெளியீடுகளையும், குருதேவரின் படங்களையும் தாங்கள் விற்பனை செய்ய வேண்டும். மதுரைக்குள் நடக்கக் கூடிய எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்று அருட்பயிர் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளரப் பாடுபடுக. வாழ்த்துகிறோம்.

6. பெரிய நோட்டுப் புத்தகங்கள் வாங்கி வைத்துக் கொண்டு குருதேவரை சந்தித்தது முதல் கிடைத்த அநுபவங்களைத் தேதியிட்டு முறையாக எழுதி வைக்கவும். குருதேவருடன் அடிக்கடி தொடர்பு

கொள்க. அ.வி.தி. தலைவர் துரைராசு, இ.ம.இ. தலைவர் M.S.R., பெரியவர் இராசு நயினு இவர்களை அடிக்கடி சந்திக்க முயலுக. O.L.இரவீந்திரநாத் மூலம் தொலைபேசியில் செய்திகளைக் குருதேவர் அவர்களுக்கும் தெரியப்படுத்துக.

7. இ.ம.இ. தலைவர் M.S.R.மாரியப்பன் தமது வசதி வாய்ப்புகளுக்கேற்ப அவ்வப்போது இயன்ற அளவு இ.ம.இ. வளர்ச்சிக்காகச் செயல்பட்டால் போதும். அவர் கவலைப்படவோ, துன்பப்படவோ வேண்டாம். கூறுக.

8. இம்மண்ணுலகில் முதன்முதலாகப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் வாரிசுகளைத் தவிர அல்லது வாழையடி வாழையெனத் தோன்றும் பாரம்பரிய அருளாளர்களைத் தவிர மற்றவர் கண்ணுல் கூடப் பார்த்திராத ஈசுவரி காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்கள் குருதேவரால் எழுதப்பட்டு; இந்த ஆண்டுக்குரிய முதல் குருதேவர் அறிக்கையில் அச்சிடப்படுகிறது.

இதேபோல், இம்மண்ணுலகில் யாரேனும் சிலர் மட்டும் கற்க முடியுமென்ற சத்தி மாந்தரம் எழுதப்பட்டு விட்டது. சத்தி மாந்தரீகம் எழுத முயற்சி நடக்கிறது. இவை இரண்டையும் பார்த்தால் கண் அவிந்து விடும்; கேட்டால் தலை வெடித்து விடும் என்ற தடையிருக்கிறது. இருந்தும் எல்லோருக்கும் அருட்கொடையாக வழங்க முன்வந்துள்ளோம் யாம். ஆனுல், **இதனைக் கற்றுப் பயிற்சி செய்யும் தகுதியுடையவர்கள் ஏறத்தாழ நம்மில் யாருமேயில்லை** என்ற நிலைதான் இருக்கிறது.

இதனை எண்ணி யாராவது தங்களைப் போன்றோர் அன்றுடம் ஒருமுறையாவது பூசைமொழி முழுவதையும் படித்துப் பூசை செய்ய வேண்டும். கொள்கை விளக்கப் புத்தகத்தை 3 நாட்களுக்கு ஒருமுறை முழுதும் படிக்க முற்பட வேண்டும். இவற்றால் பெறக்கூடிய ஞானத்தால்தான் ஞானவேந்தராகவும், ஞாஞச்சாரியாராகவும் இருக்கக்

கூடிய குருதேவரின் அருளை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக.

இவ்வஞ்சலுக்கு உடனே இரு பேறு நகல் எழுதியனுப்புக. முடிந்தால் XEROX அல்லது Cyclostyle மூலம் நிறைய நகல் தயாரித்துப் பரப்புக.

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்,**
**23-3-88.**

**நகல் நல்குபவர்:-**

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, தருகுலக் காப்பாளர் சித்தரடியார் சீ.மணி.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: தட்டச்சு செய்யப்பட்ட நகலாக இருந்தது.//**

# இந்துவேதம்

28-7-94.

## இருக்கு வேதம் காண்டம்-1 மண்டலம்-2 நாள் உரைக்கோவை வாசகம்-1

(1) விலங்குகளோடு விலங்குகளாக வாழும் மனிதனை; மனிதனோடு வாழும் மனிதனாக மாற்றிட மனதை உண்டாக்குவதே (இந்துவேதம்) அருளுலகம்.

(2) மனதைப் பண்படுத்துவதே அருளுலகம் (இந்துவேதம்).

(3) மனதைத் தூய்மைப்படுத்துவதே அருளுலகம் (இந்துவேதம்).

(4) மனதை வாய்மைப்படுத்துவதே அருளுலகம் (இந்துவேதம்).

(5) மனதிற்கு அமைதியைத் தருவதே அருளுலகம் (இந்துவேதம்).

(6) மனதிற்கு நிம்மதியைத் தருவதே அருளுலகம் (இந்துவேதம்).

(7) மனதிற்கு நிறைவைத் தருவதே அருளுலகம் (இந்துவேதம்).

(8) மனதிற்கு விடுதலையைத் தருவதே அருளுலகம் (இந்துவேதம்).

**குறிப்பு:-** [அருளுலகம், அருள்வாழ்வு, அருளுலக வாழ்வு, அருளுலக வாழ்வியல் ... என்ற சொற்கள் மாறி மாறி இந்துவேத வாசகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இது ஏடு பெயர்த்து எழுதியவர்கள், அதாவது நகல் எழுதியவர்கள் காலப்போக்கில் செய்த பிழையாக, தவறாக இருக்கலாம். இந்துவேதத்தின், அதாவது இருக்கு வேதத்தின் பல காண்டங்களில் இதேபோல் ஒரே பொருளையுடைய சொற்கள் மாறி மாறி பயன்படுத்தப்பட்டிருப்பதை இந்துவேதத்தின் ஏடுகளில் காணலாம்.]

**//குருதேவரால் 1994இல் அருளப்பட்ட 48 வாசகங்கள் கொண்ட நகலில் முதல் எட்டு மட்டும் இங்கே தரப்படுகின்றது.//**

**“இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**

**- குருபாரம்பரிய வாசகம்.**





மெய்ஞ்ஞானக்கொடி



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

இம்மண்ணுலகை விட மூத்ததாய் இருக்கக் கூடிய
அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர் மடம், பீடம், ...
பற்றிய அருமை பெருமைகளை ஓரளவாவது உணருபவர்கள்
நம்மில் எண்ணிக்கையில் பலராகிடல் வேண்டும்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the
Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609
at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org
https://gurudevar.in https://gurudevar.org
https://induism.org Email: indhuism@gmail.com